## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை - 2024

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புக்கள்
#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 பிரகாரம் அரசிடமிருந்து கிடைத்த மூலதன மானியத்தை நிதி செயலாற்றல் கூற்றில் வருமானத்தின் கீழ் உட்படுத்த வேண்டும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையிற்கு அரசிடமிருந்து கிடைத்த ரூபா 771,040 ஆன மூலதன மானியம் நிதி செயலாற்றல் கூற்றில் வருமானத்தின் கீழ் உட்படுத்தப்படாததால் ஆண்டின் வருமானம் அப் பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்து. | நியமம் இலக்கம் 11 பிரகாரம் ரூபா 771,040 பெறுமதி நிதி செயலாற்றல் கூற்றில் உட்படுத்தி இருக்காததுடன், 2025 ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது புதிய நியமத்தின் பிரகாரம் செயற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான நியமத்தை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவாக அரசிடமிருந்து கிடைத்த மூலதன மானியங்களின் ரூபா 2,323,360 தொகை காலக் கழிவாக உட்படுத்தியுள்ள காரணத்தால் ஆண்டின் வருமானம் அப் பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்து. | இதற்கான காரணம் நியமத்தின் தாக்கம் என குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான நியமத்தை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சலினுள் ஆண்டின் பற்றாக்குறைக்கு சேர்க்கப்பட்ட ஆண்டிற்குரிய ரூபா 12,629,649 ஆன மூலதன மானியம் காலக் கழிவு பெறுமதியினுள் ரூபா 2,323,360 ஆன அரசிடமிருந்து கிடைத்த மூலதன மானிய காலக்கழிவு உட்படுத்தப்பட்ட காரணத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் கிடைத்த வருமானம் ரூபா 2,323,360 | இதற்கான காரணம் நியமத்தின் தாக்கம் என குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான நியமத்தை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | செயலாற்றல் கூற்றில் ஏனைய வருமானங்களின் சரியான பெறுமானத்தை காண்பிக்காத காரணத்தால் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,552,320 தொகை நிதி நிலைமைகூற்றில் மற்றும் உரிமை மூலதனங்கள் மாற்றல் கூற்றில் கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | இதற்கான காரணம் நியமத்தின் தாக்கம் என குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான நியமத்தை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை<br>ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலஙகை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 315, 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைப்பதற்கு உரிய அனைத்து உத்தியோகத்தர்களினது ம் உடன்படிக்கை வரிசை அமைச்சின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த உத்தியோகத்தர் கள் பிணை வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஆகஸ்ட் 22 திகதிய இலக்கம் பீஈடீ 05/2022 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.9 பந்தி | வெளிநாடு செல்லும் ஒவ்வொறு உத்தியோகத்தரினாலும் இந்நாட்டு வங்கி தொகுதியினூடாக தனது பெயரில் திறக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மாதாந்தம் பணம் அனுப்ப வேண்டும். இப் பணத்ததை அனுப்புவதற்காக 02 மாத சலுவை காலம் வழங்கப்படுவதுடன், இரண்டு மாதங்கள் முடிவடைந்த உடனே குறித்த பணம் அனுப்புதலை ஆரம்பிக்க வேண்டிய போதும், 2023 பெப்ரவரி மாதம் | வெளிநாட்டு நாணயத்தை அனுப்பாத காரணத்தால் உத்தியோகத்தர் ஒருவரின் மூடபை குறைத்து செயற்பட முகாமைத்துவ சபையினால் முடிவொன்றை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் வெளிநாட்டு நாணயத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வெளிநாடு சென்ற அதிகாரசபையின் சாரதி ஒருவர் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை பணம் அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,059,513 ஆன பற்றாக்குறை ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 22,583 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,082,096 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானங்கள் ரூபா 3,915,400 குறைந்தமை, தனியால் சம்பள படிகள் ரூபா 5,665,895 இனால் மற்றும் ஒப்பந்த சேவைகள் ரூபா 4,500,673 இனால் குறைந்தமை முக்கிய காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

(அ) கடந்த ஆண்டில் கட்டிடங்கள் மற்றும் பொருத்துக்களிற்காக ரூபா 222,000 செலவிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் அதற்காக எத்தொகையையும் செலவிட்டிருக்கவில்லை. அவ்வாறே அறிவுருத்தல் நிகழ்ச்சித் திட்டங்களிற்காக கடந்த ஆண்டில் ரூபா 224,000 செலவிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் எத்தொகையையும் செலவிட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இது உண்மையான செலவின் நூறு சதவீத குறைவு அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடந்த ஆண்டில ஆளணி பயிற்சிக்காக ரூபா 272,000 செலவிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 301,000 செவிடப்பட்டிருந்தது. பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது உண்மையான செலவில் 11 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(இ) கடந்த ஆண்டில் தனியால் சம்பள படிகளிற்காக ரூபா 33,696,000 செலவிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 40,008,000 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது உண்மையான செலவில் 19 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஈ) அவ்வாறே பிரயாணச் செலவிற்காக கடந்த ஆண்டில் ரூபா 270,000 செலவிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 485,000 செவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது உண்மையான செலவில் 80 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(உ) சேவைகளிற்காக கடந்த ஆண்டில் ரூபா 2,738,000 செலவிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 3,359,000 செவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது உண்மையான செலவில் 23 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஊ) வழங்கல் செலவிற்காக கடந்த ஆண்டில் ரூபா 3,676,000 செலவிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 3,436,000 செவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது உண்மையான செலவில் 7 சதவீத குறைவு அவதானிக்கப்பட்டது.

(எ) திருத்த செலவிற்காக கடந்த ஆண்டில் ரூபா 3,833,000 செலவிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 3,295,000 செவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த

ஆண்டுடன் ஒப்பிடும் போது உண்மையான செலவில் 14 சதவீத குறைவு அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 இன் 4 இலக்க சட்டத்தின் 13(1)(ஊ) உப பந்தி பிரகாரம் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2023 இன் 10 இலக்க சட்டத்தின் 40(1)(ஈ) பிரிவின் கீழ் நிறுவப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் நிதியத்திலிருந்து இழப்பீடு வழங்க உத்தேச திட்டமொன்றை தயாரித்து அதனை அங்கீகரித்து மற்றும் செயற்படுத்த வேண்டிய போதும், அதிகாரசபையை நிறுவி 08 ஆண்டுகள் கடந்துள்ள போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன இந்த நிதியத்தில் 2024 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 26,440,018 ஆன மீதி காணப்பட்டது. | அமைச்சரினால் தற்காலிக மானியத்திற்கான சபை ஒன்றை சட்டத்தின் பிரகாரம் நியமித்துள்ளதுடன், அந்த சபையினால் இழப்பீடு வழங்க உத்தேச திட்டமொன்றை தயாரித்து, அந்த உத்தேச திட்ட பிரகாரம் இழப்பீடு கோரியுள்ள பாதிக்கப்பட்டவர்கள் இடையே இழப்பீடு செலுத்த வேண்டுமென சபை முடிவு செய்யம் பாதிக்கப்பட்டவர்களிற்கு இழப்பீடு செலுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | குற்றமொன்றில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை சட்டத்தின் 29 பிரிவின் கீழ் நிறுவப்பட்ட பாதுகாப்பு நிதிக்கு மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டினுள் திரட்டிய தண்டப்பணம் முறையே ரூபா 1,495,585 மற்றும் ரூபா 2,876,775 ஆனதுடன், சட்டத்தின் 29(4) பிரிவின் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கான செலவாக ரூபா 162,086 மற்றும் ரூபா 251,025 செலுத்தப்பட்டு இருந்தது. பாதுகாப்பு நிதியத்தின் முக்கிய செலவாக அச் சட்டத்தின் 29(4) பிரிவின் பிரகாரம் செலுத்தும் இழப்பீடு கவனிக்கப்படுவதால் மற்றும் சட்டத்தின் 2(இ) பிரிவின் பிரகாரம் குற்றமொன்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக தவறொன்றை மேற்கொள்வதால் | அமைச்சரினால் தற்காலிக மானியத்திற்கான சபை ஒன்றை சட்டத்தின் பிரகாரம் நியமித்துள்ளதுடன், அந்த சபையினால் இழப்பீடு வழங்க உத்தேச திட்டமொன்றை தயாரித்து, அந்த உத்தேச திட்ட பிரகாரம் இழப்பீடு கோரியுள்ள பாதிக்கப்பட்டவர்கள் இடையே இழப்பீடு செலுத்த வேண்டுமென சபை முடிவு செய்யம் பாதிக்கப்பட்டவர்களிற்கு இழப்பீடு செலுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| குற்றவாளியான நபர்களினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு இழப்பீட்டு தொகையை பெற்றுக் கொள்ள செய்வது அதிகாரசபையின் நோக்கமொன்றான போதும், அதிகாரசபையினால் மேற்குறித்த வாறு வருமானம் திரட்டிய போதும், இழப்பீடு செலுத்த சரியான செயன்முறை ஒன்றை தயாரித்திருக்காததால் இழப்பீடு செலுத்துவது கவனிக்கத்தக்க அளவு குறைந்திருந்தது. | | |

### 3.2 குறைபயன்பாடுடைய நிதியங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு மூலதன செலவிற்காக மத்திய அரசிடமிருந்து கிடைத்த ரூபா 2.200 மில்லியன் தொகையில் ஆண்டினுள் ரூபா 0.791 மில்லியன் செலவிட்டுள்ளதுடன், ரூபா 1.709 மில்லியன் அதாவது 78 சதவீத தொகை எஞ்சியிருந்தது. | 2024 ஆண்டினுள் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் துருசுநு செயற்திட்டத்தினால் வழங்கிய நிதியத்திற்கு உரியதாக, செயற்பாடுகளை மேற்கொண்டதனால் அரச நிதிஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ள திட்டமிட்ட செயற்பாடுகளிற்காக காலம் குறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை உரியவாறு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.1(இ) பந்தி பிரகாரம் பெறுகைகள் அட்டவணை, பெறுகை முறை மற்றும் கேள்வி மனு ஆவணங்கள் தொடர்பாக இணங்குவதற்கான பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப குழுவின் கூட்டிணைந்த முதலாம் கூட்டத்தை நடாத்த வேண்டிய போதும், ரூபா 2.01 மில்லியன் பெறுமதியான உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பான பெறுகையின் போது அவ்வாறான கூட்டமொன்றை நடத்தாது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பெறுகை முறை மற்றும் விலைகளை கோர எதிர்பார்க்கும் நிறுவனங்கள் தொடர்பாக தீர்மானித்து | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பித்திருந்தது. | | |
| (ஆ) | மேற்படி வழிகாட்டிக் கோவையின் 2.12 (அ) பிரகாரம் பெறுகைகள் குழுக்களில் மற்றும் தொழில்நுட்ப குழுக்களில் அனைத்து உறுப்பினர்களும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் படிவம் பிரகாரம் அறிக்கையொன்றில் கைச்சாத்திட வேண்டிய போதும், மேற்படி உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக பெறுகைகள் செயன்முறைக்காக நியமித்துள்ள குழுக்களின் உறுப்பினர்களினால் அவ்வாறான அறிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. | அவ்வாறான கொள்வனவு ஒன்றை மேற்கொண்ட முதலாவது சந்தர்ப்பமாகையால் அது தொடர்பாக சில தவறுகள் இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன், எதிர்காலத்தில் கணக்காய்வினால் சுட்டிக் காட்டியவாறு நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டேன். | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிற்கு இணங்க தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு செயற்பட வேண்டும். |
| (இ) | மேற்படி வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) பந்தி பிரகாரம் ரூபா 500,000 இனை விஞ்சும் பண்டங்கள் அல்லது சேவை ஒப்பந்தமொன்றிற்கு முறையான உடன்படிக்கை ஒன்றை எழுதி கையொப்பமிட வேண்டிய போதும், உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பான பெறுகைகளிற்காக ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் பெறுகைகள் நடவடிக்கைகளின் போது ரூபா 500,000 இனை விஞ்சும் பண்டங்களை கொள்வனவு செய்யும் போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டியவாறு நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிற்கு இணங்க ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |

## 3.4 ஏனைய நிறுவனங்களின் வளங்களை பயன்படுத்துதல்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் அதிகார சபைக்கு செயற்பட இயலாத காரணத்தால் மீளாய்வாண்டினுள் ரூபா 1.412 மில்லியன் தொகை மீண்டும் நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிஏற்பாட்டினால் திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டங்களிற்கான மதிப்பீட்டை தயாரிக்கும் போது ஓரளவு அதிக விலைகள் போன்றே அதிக தரமான வசதிகளுடன் கூடிய இடங்களை அடிப்படையாகக் கொண்ட போதும், அரச செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கை பிரகாரம் அநேக நிகழ்ச்சித் திட்டங்கள் அரசின் அங்கீகார இடங்களில் நடாத்த செயற்பாடுகள் | செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டதால் உண்மையான செலவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியத்தில் கீழ் மீளாய்வாண்டில் 12 நிகழ்ச்சித் திட்டங்களிற்காக ரூபா 7.502 மில்லியன் மதிப்பிடப்பட்டு இருந்ததுடன், அதற்காக உண்மையான செலவாக ரூபா 5.407 மில்லியன் செலவிடப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 2.095 மில்லியன் அதாவது 28 சதவீதம் எஞ்சியிருந்தது. | இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதிஏற்பாட்டில் எஞ்சிய 21 சதவீத அளவை அவ்வாறு இடம்பெறாதிருக்க எதிர்காலத்தில் பொறுப்பேற்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக களுத்துறை, மொனராகலை மற்றும் அம்பாறை பிரதேசங்ளை முதன்மைப்படுத்தி கணிப்பீடொன்றை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 1.429 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 0.550 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இதன் பௌதீக முன்னேற்றம் 50 சதத்தைவிட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், மதிப்பிடப்பட்ட தொகையின் ரூபா 0.879 மில்லியன் அதாவது 61 சதவீத தொகை எஞ்சியிருந்தது. அவ்வாறே செயற்திட்டத்தை உரிய நேரத்திற்கு நிறைவு செய்ய முடியாத காரணத்தால் 2024 திசெம்பர் 31 திகதிக்கு ஒதுக்கிய தொகையில் ரூபா 0.526 தொகை ஒன்று மீண்டும் நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | இந்த செயற்பாடுகளிற்கான மதிப்பீட்டை உரியவாறு தயாரித்து திட்டவட்ட கால சட்டகமொன்றை தயாரித்திருந்த போதும், பல்வேறு காரணங்களின் மீது களக் கணிப்பீட்டு தாமதம் 2023 ஆண்டிலிருந்தே இடம்பெற்றதுடன், களக் கணிப்பீடு 2024 மார்ச் அளவில் நிறைவு செய்யப்பட்டது. பூரணபடுத்தப்பட்ட அனைத்து கேள்விக் கொத்துக்களும் 2024 ஆகஸ்ட் அளவில் குறியீடு இடப்பட்டு ஒரு தரவுத் தளத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தொகுப்பிற்காக ரூபா 1.6 மில்லியன் தொகைக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு வழங்க 2024 திசெம்பர் மாதத்தில் ஒன்றுகூடிய முகாமைத்துவ சவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் இந்த செயற்பாடுகளை ரூபா 1.6 மில்லினிற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை உரியவாறு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 56 ஆன போதும், அத்திகதியில் உண்மையான ஆளணி 38 உடன்கூடியதானதுடன், அதிகார சபையின் நிர்வாக நடவடிக்கைகளிற்காக நேரடியாக பங்களிக்கும் 34 பதவிகளில் 15 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. அதிகார சபையின் பணிப்பாளர் நாயக பதவிக்காக அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட 2017 ஆண்டு முதல் இது வரை நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்காத காரணத்தால் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டு செல்கையில் அது பாரிய தடையாக இருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான தகவல்கள் அமைச்சரவை உப குழுவிற்கு சமர்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடடிக்கை எடுக்க வேண்டும். |

### 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்
### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியத்தில் மற்றும் அரச நிதிஏற்பாட்டின் மீது செயற்படுத்த திட்டமிட்டு, செயல் நடவடிக்கை திட்டதில் உட்படுத்தியிருந்த கூட்டுத் தொகை ரூபா 4.5 மில்லியனான ஆறு செயற்பாடுகளை ஆண்டினுள் செயற்படுத்தி இருக்கவில்லை. | பல்வேறு காரணங்களினால் இந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளுமாறு செயல் நடவடிக்கை திட்டததை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியத்திற்கு உரியதாக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டதில் உட்படுத்தியிருக்காத 03 செயற்பாடுகளிற்காக நிதியங்களில் இருந்து ரூபா 1.001 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மூலம் பெற்றுக் கொண்ட உடன்பாடு பற்றிய தகவல்களை சமர்ப்பிக்கவில்லை. | இந்த 03 செயற்பாடுகளிற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உடன்பாட்டிற்காக அனுப்பப்பட்ட மின்அஞ்சலிற்கு வாய்மொழி மூலம் பதில் வழங்கியதாகவும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தி முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உடன்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |